**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANYAKUMARI AT NAGERCOIL.**

13.03.2025

O.S. No. 329/2022

P.W.1 திரு. சுப்பிரமணியன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்) -**

நான் ஜவுளி தொழில் செய்து வருகிறேன். எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. எனக்கு சொந்த ஊர் சங்கரன் கோவில். திருப்பதிசாரத்தில் இருக்க கூடிய பிரதிவாதியை எனக்கு எப்படி தொியும் என்றால் அவர் நகைக்கடை வைத்துள்ளார். எங்கள் ஊரிலும் வரவு செலவு வைத்திருந்தார் அதனால் தொியும். வரவு செலவு என்ன என்றால் அவருக்கு எங்கள் ஊரில் நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் எனக்கு நண்பர்கள் அதன் மூலம் எனக்கு தொியும். நண்பர்களின் பெயர்கள் சொல்ல முடியுமா என்றால் சீதாலெட்சுமி ஜீவல்லர்ஸின் உரிமையாளர் ராமகிருஷ்ணன். என்ன குடும்பத் தேவைக்காக பணம் வேண்டும் என்று பிரதிவாதி சொன்னாரா என்றால் பிள்ளைகளின் படிப்பு செலவு மற்றும் தொழிலின் நெருக்கடி என்று கூறினார். பணம் எங்கே வைத்து கேட்டார் என்றால் நாகர்கோவிலில் வைத்து கேட்டார். நான் நாகர்கோவிலுக்கு வியாபார ரீதியாக வந்து போவது உண்டு. பணம் கேட்ட அன்றே கொடுத்து விட்டேனா என்றால் இல்லை. மீண்டும் ஊருக்கு வரும் போது கொண்டு வருகிறேன் என்று சொல்லி கொண்டு வந்து கொடுத்தேன். பணம் ரொக்கமாக ரூபாய் 15,00,000/- எப்போதும்

இருக்குமா என்றால் இருக்கும். வருமான வரி கட்டுகிறேனா என்றால் கட்டுகிறேன். வருமான வரி கணக்கில் இந்த கடன் தொகை துலங்குமா என்றால் துலங்காது. அதை குறிப்பிடபடவில்லையா என்றால் குறிப்பிடபடவில்லை. வா.சா.ஆ. 1 ஆவணம் அடமான பத்திரத்தில் பக்கம் 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள "கிரம பலிசை" என்றால் என்ன என்றால் எனக்கு தொியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எத்தனை சதவீதம் வட்டி கொடுக்க வேண்டும் என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வட்டி எவ்வளவு என குறிப்பிடபடாததால் எனக்கு வட்டி கோருவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் மனுவிலே அவர் வட்டி தர வேண்டும் என ஒத்துக் கொண்டுள்ளார். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி ரூபாய் 17,03,724/- கொடுக்க வேண்டும் என நான் சொல்லியிருக்கும் விவரமும் நான் தாக்கல் செய்துள்ள கணக்கு விவர பட்டியல் தவறானது என்றால் சரியல்ல. அவர் பணம் கொடுக்க வேண்டியதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார். 19.10.2022 ஆம் தேதி நான் அனுப்பியதாக சொல்லும் வா.சா.ஆ. 5 வக்கீல் அறிவிப்புக்கு முன்னர் வேறு ஏதாவது அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. 2018 ஆம் ஆண்டிலேயே வழக்கிறஞர் சீனிவாசன் மூலமாக இந்த பிரதிவாதிக்கு நான் பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி எனது வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. வா.சா.ஆ. 5 அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய வா.சா.ஆ. 6 பதில் அறிவிப்பில் வழக்கிறஞர் சீனிவாசன் அனுப்பிய அறிவிப்பு குறித்து பிரதிவாதி

சொல்லியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த பதிலறிவிப்பில் பாக்கி தொகை ரூபாய் 5,50,000/- தான் கொடுக்க வேண்டும் என பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. இந்த விவரத்தை எனது வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2018 ல் நான் ஒரு அறிவிப்பு கொடுத்ததாக பிரதிவாதி கூறியுள்ள விவரத்தையும் எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். சீனிவாசன் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக பிரதிவாதி கூறியுள்ள விவரத்தை பற்றி நான் விசாரித்தேனா என்றால் இல்லை. திரு. சீனிவாசன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதியிடம் ரூபாய் 7,50,000/- தான் கேட்டுள்ளார் என்றாலும் அதன்பிறகு பிரதிவாதி ரூபாய் 2,00,000/- என்னுடைய முகவர் ராமசுப்புவிடம் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. 01.02.2019 அன்று ரூபாய் 1,00,000/- மும், 01.06.2019 அன்று ரூபாய் 1,00,000/- ஆக ரூபாய் 2,00,000/- மும் பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பல தவணைகளாக கொடுத்த தொகைகளை ஒவ்வொரு முறையும் நான்தான் நேரில் வந்து வாங்குவேனா என்றால் ஆமாம். ராமசுப்புவை எனக்கு தெரியுமா என்றால் தொியும். எப்படி தொியும் என்றால் அவர் என்னுடைய மருமகன். ராமசுப்புக்கு நான் ஏதாவது பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. ராமசுப்புவிற்கு நான் கொடுத்த அதிகாரப்படி ராமசுப்பு பிரதிவாதியிடம் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் பணத்தை பெற்றுக்கொண்டு ரசீதும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராமசுப்பு கடைசியாக ரசீது கொடுக்கும்போது பிரதிவாதி கொடுக்க

வேண்டிய பாக்கி தொகை ரூபாய் 5,50,000/- என எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வட்டியும் கொடுக்க வேண்டும். 2023 வரைக்கும் பாக்கி தொகை ரூபாய் 5,50,000/- ஆக இருக்கும்போது அதற்கு மூன்று மடங்காக ரூபாய் 17,03,724/- கேட்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. அந்த சொத்து எங்குள்ளது என பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த சொத்து நஞ்சையா, புஞ்சையா என்றால் காலி மனையில் ஒரு கட்டிடம் உள்ளது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த சொத்து ஏற்கனவே அடமானம் வைக்கப்பட்ட விவரம் தொியுமா என்றால் தொியாது. நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்தேன். எனது மருமகன் ராமசுப்புவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம். எனக்கும் இந்த பணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் ராமசுப்புவிற்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கு வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் ராமசுப்புவிற்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் நகல். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது ஏற்கனவே பள்ளிகூடம் நடத்துவதற்காக அரசாங்கத்திற்கு அடமானம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ஒரு நம்பிக்கையின் பேரில்தான் கடன் கொடுக்கப்பட்டது. இந்த தொகைக்கும், எனக்கும் எந்த தொடர்பும்

கிடையாது என்றாலும் தவறான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.